இறைவன் குணமளிப்பவன்
ஒவ்வொரு நோய்க்கும்
மருந்துண்டு (நபி பெருமானார்)



தெய்வீகம் 9
மருத்துவம் – 9
பிப்ரவரி – 2009

13–வது ஆண்டு



தெய்வீக மருத்துவம்
370, மசூதிவீதி,நியுடவுன்,
வாணியம்பாடி 635 752
வேலூர் மாவட்டம்
Tel:04174-235395,235390
Fax:+91-04174-235390
Email:
drakbarkausar@gmail.com
hakeemakbarkausar@gmail.com

DR.AKBAR KAUSARIN DAIVEEGA MARUTHUVAM (MONTHLY)
Owned By Dr.S.Akbar Kausar
Printed and Published by Dr.S.AKBAR KAUSAR at Devi Weekly Press,
Old No.712, New No.246, Anna Salai, CHENNAI - 600 006.
EDITOR:
Dr.S. AKBAR KAUSAR Place of Publication: Old 712. New No.246, Anna Salai, Chennai - 600 006. Ph:28486695.

# கோயிலுக்குள் மறைந்திருக்கும் பொக்கிஷம் - தலவிருட்சங்கள்

இந்துக்களுக்கு கோயில், இஸ்லாமியர்களுக்கு மசூதி, கிருஸ்தவர்களுக்கு தேவாலயங்கள், சீக்கியர்களுக்கு குருத்வாரா சொந்தம். ஆனால், அங்கு மறைந்து இருக்கும் பொக்கிஷங்கள் மனித சமுதாயத்துக்கே சொந்தமானதாக அமைந்திருக்கிறது.

இன்றைய மனிதன் ஒருவருக்கு கடுமையான நோய் வந்து விட்டால், நவீன மருத்துவமனைகளை தேடிச் செல்கின்றான். ஆனால், பழங்காலத்தில் பல கோவில்களை தேடிச் செல்வான். அவனுக்கு அவனுடைய நோயிலிருந்து நிவாரணம் பெற மருந்துகள் கிடைக்கும். அந்த மருந்துகள் தான் கோவில்களில் காணப்படும் மரங்கள். இவைகளுக்கு தலவிருட்சங்கள், தெய்வீக மரங்கள், கோவில் மரங்கள் என அழைப்பார்கள்.

கிராமங்கள் நகரங்களாகவும், நகரங்கள் மாநகரங்களாகவும் மாறி வரும் சூழ்நிலையில் நம் பலவகையான பண்டை கலாச்சாரம் மெல்ல மெல்ல மறைந்து கொண்டே இருக்கும் சூழ்நிலையில் கோவில் மரங்களும் மெல்ல மெல்ல அழிந்து வருவதை நாம் உணர வேண்டும்.

இந்த மரங்களில் பலவகையான நோய்களைப் போக்கும் மருத்துவ குணங்கள் உள்ளன. அவைகளைப் பாதுகாப்பதுடன் தமிழக அரசு அதன் இனவிருத்தியை அதிகரிக்கும் வகையில் திசு வளர்ப்பு (செரிகல்ச்சர்) முறைப்படி மூலிகைச் செடிகளை வளர்த்து வீடுகளில் பொதுமக்கள் நட்டு வளர்க்க இலவசமாகத் தரலாம்.

தலவிருட்சங்களின் பயன்களை விழிப்புணர்வுத் திட்டங்கள் மூலம் மக்களுக்கு எடுத்துரைக்கலாம்.

தமிழக கோவில்களில் தலவிருட்சங்களைப் பற்றி ஆங்காங்கே குறிப்புகள் தான் கிடைக்கின்றனவே தவிர, அவை அனைத்தும் முழுமையான ஒரே நூலில் நான் தேடிய இடங்களில் எல்லாம் கிடைக்கவில்லை. அந்த குறையைப் போக்கும் வகையில் "நோய்களைக் குணப்படுத்தும் இந்துக் கோவில் மரங்கள்" நூல் எழுதி வெளியிட்டு இருக்கின்றேன்.



முன் அட்டையில்: நடிகர் இயக்குநர் திரு.சேரன் நூல் வெளியிட, செல்வி. சினேகா பெறுகிறார். அருகில் டாக்டர் அக்பர் கவுஸர் உள்ளார்.

வாசகர்கள் வாங்கிப் படித்து பயன் பெறுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

தங்கள் அன்புள்ள,

டாக்டர் எஸ். அக்பர் கவுஸர்.

டாக்டர் அக்பர் கவுஸரின் தெய்வீக மருத்துவத்தில் பிரசுரிக்கப்படும் கட்டுரைகளும், படங்களும் ஆசிரியருக்கு மட்டுமே சொந்தமானது. எனவே இவ்விதழின் எந்தப்பகுதியையும் ஆசிரியரிடமிருந்து எழுத்து முன் அனுமதியின்றி மறு பிரசுரம் செய்வது குற்றமாகும்.